Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**C.C.No.66/2022**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :சுரேந்திரன் | ஜாதி | : |
| த/பெ | :செல்வம் | தொழில் | : டிரைவர் |
| கிராமம் | : நரசிங்கபுரம் | சமயம் | : |
| தாலுகா | :ஆத்துார் | வயது | :31/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.04.2024.

(Accused A1 to A4 present.)

முதல் விசாரணை

நான் நரசிங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். டிராக்டர் டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் சிவக்குமார், சிவா, நாகராஜ் ஆகியோரை தெரியும். எதிரி காசம்மாள் என்பவரை தெரியும் அவருக்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. நான் எதிரி நாகராஜ் என்பவரது மகளை திருமணம் செய்துள்ளேன். எதிரி நாகராஜ் என்பவருக்கு அவரது மகளை நான் காதல் திருமணம் செய்தது பிடிக்கவில்லை. அப்போது எதிரி நாகராஜ் என் மீது செம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். அப்போது நாகராஜ் எனக்கும் எனது மகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்து சென்றுவிட்டார். கல்யாணம் முடிந்து 3 மாதம் கழித்து நான் வேலைக்கு போன சமயங்களில் நாகராஜ் அவரது மகளை கூப்பிட்டு சாப்பாடு போடுவது, பேசிவதுமாக இருந்து வந்தார்கள். மேற்கண்டவாறு 7, 8 மாதங்கள் நடந்து கொண்டிருந்தது. வளைாகப்புக்கு ஏற்பாடு செய்தபோது ஏற்கனவே எங்களது வீட்டில் சிறப்பாக வளைகாப்பு செய்து முடித்து விட்டார்கள் என்று சொன்னார். எங்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டது. எனது மனைவி விந்தியா நெல்லூாரிலுள்ள எனது அக்கா சூர்யா வீட்டிற்கு சென்று இருந்தார். அங்கு இருக்கும்பொழுது எனது மனைவியின் அப்பா அங்கு சென்று தகராரில் ஈடுபட்டார். பின்பு 28.03.2021 அன்று இரவு 10.00 மணியளவில் நான் நரசிங்கபுரத்திலுள்ள எனது வீட்டில் இருந்தபொழுது எதிரிகள் சிவக்குமார், சிவா, நாகராஜ் ஆகியோர் என்னை கோத்தா கொம்மா தேவிடா பயலே என்று அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசினார்கள். அதுகுறித்து நான் கேட்க சென்றபோது எதிரிகள் கம்பியை வைத்துக்கொண்டு தயாராக இருந்தார்கள். எதிரி சிவா என்பவர் என்னை கட்டிபிடித்து எனது இடது காதை கடித்துவிட்டார். எதிரி சிவக்குமார் என்னை கம்பியை வைத்து நடுமண்டையிலும் இரண்டு பக்கவாட்டு தலையிலும் அடித்து விட்டார். அதன்பின்பு நான் மயங்கி விழுந்து விட்டேன். என்னை அருகில் இருந்தவர்கள் திண்டுக்கல் அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். நான் சிகிச்சையில் இருக்கும்பொழுது செம்பட்டி போலீசார் வந்து என்னை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திருமணம் நடைபெற்றபோது 1, 2 எதிரிகள் என்னிடம் எந்த தகராறும் செய்யவில்லை. எனது வீடும், எதிரிகள் வீடும் பக்கத்து பக்கத்து வீடு என்றால் சரிதான். 4 வீடு தள்ளி உள்ளது. என்னுடன் எனது அம்மா மட்டும் குடியிருந்து வருகிறார். அப்பா இல்லை. நான் காதல் திருமணம் செய்ததால் எனக்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று நானும் எனது அம்மாவும்

மட்டும் வீட்டில் இருந்தோம். புகார் வாக்குமூலத்தை நான் சொல்லிதான் போலீசார் எழுதினார்கள் என்றால்ச சரிதான். முதல் விசாரணையில் எதிரிகள் அசிங்கமாக பேசிக்கொண்டார்கள் அதை நான் கேட்கபோனேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் நான் நாயக்கர் தெரு வீட்டில் இருந்தபொழுது அங்கு வந்து திருமணம் செய்து அங்கு அனுப்பிவிட்டியே என்று தகராறு செய்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னை போலீசார் திண்டுக்கல் அரசு மருத்துவனையில் வைத்து விசாரித்தார்கள் அதன்பிறகு விசாரணை செய்யவில்லை. வழக்கு சம்பவம் நடைபெற்றவுடன் சித்தையன்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன் என்றால் சரிதான். அங்கு சிகிச்சை எதுவும் அளிக்கவில்லை. ஆம்புலன்ஸ் பிடித்து திண்டுக்கல் அரசு மருத்துவமகைக்கு அழைத்து சென்றார்கள். சம்பவம் சம்மபந்தமாக போலீசாருக்கு உடனடியாக தகவல் சொன்னேனா என்றால் நான் மயங்கி விட்டேன். புகாரில் எதிரிகள் கம்பியாலும், கத்தியாலும் அடித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். யார் கத்தியை பயன்படுத்தி தாக்கினார்கள் யார் கம்பியை பயன்படுத்தி தாக்கினார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி சிவா என்பவர் என்னை கட்டிபிடித்து காதை கடித்து விட்டார் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். மேற்கண்ட சங்கதியை புகாரிலும், போலீஸ் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுளேன். மேற்கண்ட சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும்போது எனக்கு ரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது அதனால் சட்டையில் ரத்தக்கரை படிந்திருந்தது. மேற்கண்ட சண்டையை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் நான் மயக்கமாக இருந்ததால் தெரியவில்லை. போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கும்பொழுது எனது அம்மாவும், அக்காவும் என்னுடன் கூட இருந்தார்கள். அவர்களிடம் சாட்சி கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. அவர்கள் அசிங்கமாக பேசியவுடன் நானும் கோபத்தில் சண்டை போட சென்றேன் என்றால் சரிதான். அப்போது ஊரில் எல்லோரும் நிறைய பேர் கூடிவிட்டார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும்பொழுது எனது மனைவி எதிரியின் வீட்டிலிருந்தார். சம்பவம் நடைபெற்றபோது எனது மனைவி எதிரிகளின் வீட்டில் இருந்த விபரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை. சம்பவத்திற்கு முன்பு எனது மனைவி எதிரியின் வீட்டிற்கு வந்தாரா, சம்பவத்திற்கு பின்பு வந்தாரா என்றால் சம்பவத்திற்கு முன்பு எனது மனைவி எதிரியின் வீட்டிற்கு வந்தார். எங்களது குழந்தை என்னிடம் தான் உள்ளது. புகார் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரிகளுடன் மேலும் 2 பேர் மீதும் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கவில்லை புகார் வாக்குமூலத்தில் மேலும் ஒருவர் மீது தான் புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஒருவரை விட்டுவிட்டு ஆஜர் எதிரிகள் 4 பேர் மீது மட்டும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விடுபட்ட ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் போலீசார் புகார் வாக்குமூலம் வாங்கும்பொழுது சம்பவம் நடைபெற்ற மறுநாள் மாலை 6.00 மணி இருக்கும். நான் எனது மனைவியை எதிரிகளிடம் சென்று வரதட்சணை வாங்கி வருமாறு அடித்து துரத்தி விட்டேன் என்றால் அது தவறு. அதனால் என் மீது புகார் கொடுத்துவிடுவார்கள் என்பதற்காக எதிரிகள் மீது இந்த வழக்கில் புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன தேதி சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்ற வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரில்ல. எதிரிகள் இந்த சம்பவத்திற்கு பின்பு 3 வருடங்களாக அந்த ஊரில் இல்லை என்றால் சரிதான். எனக்கு பயந்துகொண்டுதான் எதிரிகள் அந்த ஊரில் குடியிருந்து வரவில்லை என்றால் சரியல்ல.

Sd/.P.Jaisankar
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.